# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

## அசல் வழக்கு எண். 121/2021

வாக்குமூலம். வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாரிமுத்து | ஜாதி | |
| த/பெ. | ராமலிங்கம் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 60 /2024 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 28.08.2024 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் தற்போது கோயம்புத்தூரில் வசித்து வருகிறேன். கோயம்புத்தூரில் நானும் என் மனைவியும் தனி வீட்டிலும் என் மகள் தனியாகவும் வசிக்கிறோம். தாவா சொத்து அறந்தாங்கி எல்.என்புரம் பகுதியில் இருக்கிறது. தாவா சொத்தை என் பெயரில் கிரையம் வாங்கி இருக்கிறேனா என்றால் என் பெயரில் வாங்கவில்லை, நான் சம்பாதித்து என் மனைவி பெயரில் வாங்கி இருக்கிறேன். வா.சா.ஆ 1 ஆவணம் எனது பெயரில் இருக்கிறதா என்றால் இல்லை. என் மனைவி பெயரில் நான் சம்பாதித்து வாங்கியதாக சொல்வது பொய் என்றாலும் என் மனைவி பெயரில் வாங்கிய சொத்து அவரது சம்பாத்தியத்தில் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. நானும் எனது மனைவியும் வருத்தம் இல்லாமல் தான் சந்தோசமாக தான் வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான்.

2. எனது மனைவியான 1ம் பிரதிவாதி மூலம் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள பத்திரத்தை ரத்து செய்ய வழக்கு தொடரவில்லை என்றால் எனது மனைவிக்கு உடல்நிலை சரியில்லாததால் என்னை வைத்து வழக்கு தொடர்ந்தார். எனது மனைவி உடல்நிலை சரியில்லை என்றால் என் மனைவியிடம் அதிகாரம் பெற்று வழக்கு தாக்கல் செய்திருக்கலாம் என்றால் செய்திருக்கலாம். ஆனால் நான் அவ்வாறு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ஆவணத்தை ரத்து செய்ய சொல்லி வழக்கு தொடர நான் சட்டப்படி தடைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

3. நானும் எனது மனைவியும் நாளது தேதிவரை சந்தோசமாக தான் வாழ்ந்து

வருகிறோம் என்றாலும் , வேண்டுமென்றே சட்டத்திற்கு புறம்பாக தாவா வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய தொழில் வட்டிக்கு கொடுப்பது தான் என்றால் சரிதான், நான் ரியல்எஸ்டேட் தொழிலும் செய்து வருகிறேன். எங்கள் சமுதாயத்தில் பெண்கள் தனிப்பட்ட முறையில் வட்டிக்கு விடுவது வழக்கம் என்றால் சரியல்ல. 20.08.2018 இனாம்செட்டில்மெண்டில் கண்ட சொத்தை 1ம் பிரதிவாதி வத்சலாஆச்சி தனது சேமிப்பு மூலம் கிடைத்த தொகையை கொண்டும் வட்டிக்கு விட்டு சம்பாதித்த தொகையை கொண்டும் கிரையம் வாங்கிய சொத்தை தான் வத்சலா ஆச்சி இனாம்செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ 1 ஆவணத்தில் கண்ட சொத்தை நான் எனது மனைவி பெயரில் பெயரளவில் வாங்கியதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. தாவா சொத்தை 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி மீது உள்ள அன்பு, பாசத்தின் காரணமாக இனாம்செட்டில்மெண்ட் எழுதி வைத்து இனாம்செட்டில்மெண்ட் தேதியில் இருந்து 2ம் பிரதிவாதி தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றாலும், தாவா சொத்தின் மீது எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியை தத்து கொடுத்ததனால் 1ம் பிரதிவாதிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் இடையே உள்ள அம்மா - மகன் என்ற உறவு அற்று போகாது என்றால் சரியல்ல . வா.சா.ஆ 1 ஆவணத்தை ஆட்சேபித்து நாளது தேதிவரை 1ம் பிரதிவாதி அறிவிப்போ வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2ம்பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் கொடுக்க நான் முயற்சித்தபோது தான் கிரையம் வாங்கி கொள்வதாக நம்பிக்கை ஊட்டினார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

5. என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 2வது பிரதிவாதி பதில் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 வழக்கறிஞர் அறிவிப்பு எனது மனைவிக்கும் நான் அனுப்பியிருக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 2 வழக்கறிஞர் அறிவிப்பு படி நான் ஒரு முகவரியிலும், 1ம் பிரதிவாதியான எனது மனைவி மற்றொரு முகவரியில் இருப்பதாக கண்டு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் நானும் எனது மனைவியும் ஒரே முகவரியில் தான் இருந்தோம். மேற்படி அறிவிப்பிற்கு தகவல் கொடுத்தது நானும் என் மகளும் என்றால் சரிதான். வா.சா.ஆ 2 வழக்கறிஞர் அறிவிப்பை எனது மனைவி பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். நோட்டீசை பெற்றுக்கொண்ட பிறகு 1ம் பிரதிவாதி எனக்கு பதில் அறிவிப்பு கொடுத்தாரா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்த பிறகு வழக்கின் அழைப்பாணை அனுப்பப்பட்டு எனது மனைவி பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். அதன்பிறகு எனது மனைவி நேரடியாகவோ வழக்கறிஞர் மூலமாகவோ நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றால் சரிதான்.

6. இனாம்செட்டில்மெண்ட் எழுதி வைத்த 1ம் பிரதிவாதி நாளது தேதிவரை எவ்வித

ஆட்சேபணையும் செய்யாத நிலையில் ஆட்சேபிக்க எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பரிபூரண சம்மதத்துடன் வா.சா.ஆ 1 ஆவணத்தை எழுதி கொடுத்து 2 ம் பிரதிவாதி அதை அனுபவித்து வருவதால் தான் 1ம் பிரதிவாதி ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்து மீது எந்தவித உரிமையும் இல்லை என்றாலும் தாவா வழக்கு நிலைநிறுத்தக்கத்தல்ல என்றால் சரியல்ல.

**ஒ/ம். V. சிவகாமசுந்தரி,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**